69	மாவட்ட துணை காவல் கண்காணிப் பாளர்.	தமிழ்நாடு காவல் பணி.	32
70	மாவட்ட துணை காவல் கண்காணிப் பாளர் (தொழில நுட்பம்)	தமிழ்நாடு காவல் பணி	5
71	காவல் துறையில் உதவி தளவாய்.	தமிழ்நாடு காவல் பணி	7
72	காவல் துறையில் போக்குவரத்து பணிமனை மற்றும் பயிற்சிபள்ளி பணி மேலாளர்.	தமிழ்நாடு காவல் பணி	1
73	மாநில துறைமுகத் துறையில் நிர்வாக அலுவலர்.	தமிழ்நாடு துறைமுகப் பணி.	1
74	பொதுச் சுகாதாரத் துறையில் கலவி மற்றும் தகவல் அலுவலா.	தமிழ்நாடு பொது சுகாதாரப் பணி.	1
75	பொதுச் சுகாதாரத் துறையில் முதுநிலை பூச்சியியலாளர்.	தமிழ்நாடு பொது சுகாதாரப் பணி.	12
76	பொதுச் சுகாதாரத் துறையில் முதுநிலை தொழில்நுட்ப நேர்முக உதவியாளர் நிலை-1.	தமிழ்நாடு பொது சுகாதாரப் பணி.	57
77	மாவடடப் பதிவாளர்	தமிழ்நாடு பதிவுப்பணி	167
78	தலைமை உடற்பயிற்சி ஆய்வாளர்	தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி	1
79	கருவூல மற்றும் கணக்குத் துறையில் வகை 3 பதவிகள.	தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குப்பணி	152
80	உதவி இயக்குநர்/எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரின் நேர்முக உதவியாளர்.	தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுப்பணி	10
81	எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் உதவி பணி மேலாளர்.	தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுப்பணி	3
82	புள்ளியியல் உதவி இயக்குநர்.	தமிழ்நாடு புள்ளியியல் பணி	25
83	நில அளவை மற்றும் நிலப் பதிவுரு உதவி இயக்குநர்.	தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலப்பதிவுருக்கள் பணி.	14
84	நில அளவை மற்றும் நிலப் பதிவுரு துறையில் உதவி நிலத்தீர்வை அலுவலர்.	தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலப்பதிவுருக்கள் பணி.	2
		கூடுதல்	**2,695**

பின் இணைப்பு - 8

(தொடர்பு பகுதி 4)

மேல்முறையீடு/மறு ஆய்வு/சீராய்வு/ஒழுங்கு நடவடிக்கை ஒய்வூதியம் பிடித்தம் பற்றிய விவரங்கள்.

வரிசை எண் மற்றும் துறையின் பெயா	மேல்முறை யீடு /மறு ஆய்வு சீராய்வு மனுக்கள் நேர்மைக்கு புறமபாக நடந்து கொண்ட வழக்குகள்	வேறுவகை யில் குறறம சாட்டப் பட்ட வழக்குகள்	ஒழுங்குநடவடிக்கைகள்/ஒய்வூதியம் பிடித்தம்			
			நேர்மைக்கு புறம்பாக நடந்து கொணட வழக்குகள்	வேறு வகையில் குற்றம் சாட்டப் பட்ட வழக்குகள்	நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட வழக்குகள்	வேறு வகையில் குற்றம் சாட்டப் பட்ட வழக்குகள்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1 ஆதிதிராவிடர் மறறுமு மலைவாழ் பழங்குடியினர்	..	1	..	1	..	..
2 வேளாண்மை	..	20	..	9	1	1
3 கால்நடை பராமரிப்பு மறறுமு மீன் வளம்	..	2	..	2	..	..
4 கூட்டுறவு, உணவு மறறும் நுகர்வோர் பாதுகாப்பு	..	3	.	2	....	
5 வணிகவரி மற்றுமு அறநிலையத் துறை	1	35	..	6	..	2
6 கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பம	1	9	..	5	..	..
7 எரி சகதி	1	1	..	..	..	..
8 சுறறுப்புறச்சூழல் மற்றும் வனம்	1	12	..	4	..	3
9 நிதி	-	21	..	7	..	..
10 உள துறை	1	4	..	9	2	1
11 கைத்தறி கைவினைப் பொருட்கள், துணை மற்றுமு கதர்	...	1	...	..	..	..
12 சுகாதாரம மற்றும் குடும்ப நலத் துறை	2	21	2	71	..	..
13 வீட்டுவசதி மற்றும் நகாப்புற வளர்ச்சி	..	3	..	..	..	..
14 செய்தி மற்றும் சுற்றுலா	..	1	..	..	..	..
15 தொழிலாளா மற்றும் வேலை வாய்ப்பு	1	12	..	3	..	..
16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல துறை	..	3	..	2	..	..
17 திட்டம் மற்றும் வளர்ச்சி	..	1	..	..	..	..
18 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை	..	1	..	1	..	.
19 பொதுப் பணித் துறை	1	6	6	27	..	2
20 ஊரக வளர்ச்சி	..	6	..	5	..	1
21 வருவாய்	4	21	1	16	1	..
22 சிறு தொழில்கள்	..	7	..	1	..	..
23 சமூக நலம	..	15	..	2	..	..
24 போக்குவரத்து	1	3	..	..	..	..
25 தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை	..	1	..	..	..	..
மொத்தம்	**14**	**210**	**9**	**173**	**4**	**10**

மேல்முறையீடு/மறுஆய்வு சீராய்வு மனுக்கள்	..	224
ஒழுங்கு நடவடிக்கை	..	182
ஓய்வூதியம் பிடித்தம்	..	14
மொத்தம்		**420**

பின் இணைப்பு-9

(தொடர்பு பகுதி 4)

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒழுங்குமுறை விதி 1954 ல் விதி 16(பி) பிற்பகுதியின்கீழ் செய்யப்பட்ட நியமனங்கள்.

வரிசை எண மற்றும் துறையின் பெயர் (1)	பதவியின் பெயர் (2)	எண்ணிக்கை (3)
1. மாநிலப் பணிகள்:		
1 மருத்துவத் துறை	பயிற்றாசிரியர்	1
2 நெடுஞ்சாலை மற்றும் ஊரக பணித் துறை.	உதவி பொறியாளர்	38
3 வேளாண்மைத் துறை	உதவி பொறியாளர்	115
4 மருததுவத் துறை	உதவி மருத்துவர்	1
5 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி நலத் துறை.	தலைமை ஆசிரியர்/ தலைமை ஆசிரியை (அரசு பள்ளிகள்)	1
		156
2. சார்நிலைப் பணிகள்:		
1 தொழில் சார்நிலைப் பணி	இளநிலை பொறியாளர்/ உதவி பொறியாளர்	3
2 போக்குவரத்துத் துறை	உந்தூர்தி ஆய்வாளர்	1
3 சமூக பாதுகாப்புத் துறை	உளவியல் வல்லுநர்	1
4 தொழிற்சாலைப் பணி	உதவி ஆய்வாளா	1
5 தொழிலாளர் பணி	ஆய்வாளர்	2
6 தொல்பொருள் ஆய்வுத் துறை	காப்பாட்சியர்	1
		9
3 தலைமைச் செயலகப் பணி		
1 பொதுப் பணித்துறை	உதவியாளர்	3
2 ஊரக வளர்ச்சித் துறை	உதவியாளர்	1
3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல துறை	உதவியாளர்	2
4 தொழிலாளர் துறை	உதவியாளர்	1
5 பணியாளர் மற்றும நிர்வாக சீர்திருத்தத் துறை.	உதவியாளர்	1
		8
4 அமைச்சுப் பணிகள்:		
1 வேளாண்மைத் துறை	இளநிலை உதவியாளர்	44
2 கல்வித் துறை	இளநிலை உதவியாளர்	82
	தட்டச்சர்	1
3 பொதுப் பணித் துறை	இளநிலை உதவியாளர்	34
4 ஊரக வளர்ச்சித் துறை	இளநிலை உதவியாளர்	82
	தட்டச்சர்	1
	ஊரக நலத் துறை அலுவலர் நிலை.11	3
	காசாளர்	1
5 பொது நலத் துறை	கண்காணிப்பாளர்	1
	உதவியாளர்	1
		251

வரிசை எண் மற்றும் துறையின் பெயர்	பதவிகளின் பெயர்				
	இளநிலை உதவியாளர்	தட்டச்சர்	நிலை அளவையர்	இளநிலை வரைவாளர்	ஊரக வளர்ச்சி அலுவலர் நிலை. (II)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. வருவாய் துறை	37	..	5	8	..
2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புகள் துறை	27	1	..	..	5
3. மருத்துவ கல்வி	2	..	.	..	.
4. புள்ளியியல் துறை	13	1	..	..	..
5. கூட்டுறவுத் துறை	7	-	..	..	..
6. கருவூலம் மற்றும் கணக்குத் துறை	9	..	..	....	
7. காவல் துறை	6	1	.	..	..
8. போக்குவரத்துத் துறை	4	..	..	..	.
9. வனத் துறை	23	..	..	..	..
10. வேலை வாய்ப்பு மற்றும் தொழிலாளர் துறை	18	..	..	..	..
11. மீன் வளத் துறை	4	.	.	..	..
12. வணிகவரி மற்றும் அறநிலையத் துறை	23	.	...	...	.
13. கைத்தறி மற்றும் நெசவுத் துறை	1	..	..	....	
14. தொழில் துறை	9	2	..	..	..
15. சமூக நலத் துறை	11	..	..	..	..
16. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை.	8	1	...	...	..
17. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை	9	..	...	...	
18. நகராட்சி நிர்வாகம்	6	..	..	..	1
19. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை	2	..	..	..	..
20. ஊராட்சி வளர்ச்சி	4	.	..	..	..
21. வேளாண்மைத் துறை	1	.	.	..	
22. பொதுப் பணித் துறை	.	1	..	..	..
23. பொது சுகாதாரம்	5	..		..	.
மொத்தம்	229	7	5	8	6

மாநிலப் பணிகள்	..	156
சார்நிலைப் பணிகள்	..	9
தலைமைச் செயலகப் பணிகள்	..	8
அமைச்சுப் பணிகள்	..	506
மொத்தம்		679

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒழுங்கு நடைமுறை விதி 1954-ல் விதி 16(பி) பிற்பகுதியின்படி நியமனம் செய்ய இசைவு மறுத்த விவரம்.

வரிசை எண் மற்றும் துறையின் பெயர் (1)	பணியின் பெயர் (2)	மனுதாரர் எண்ணிக்கை (3)
1. மாநிலப் பணிகள்	எவருமில்லை	
2. சாரநிலைப் பணிகள்	”	
3. அமைச்சுப் பணிகள்		
1. பொது சுகாதாரம்	இளநிலை உதவியாளர்	2
மாநிலப் பணிகள்	0	
சார்நிலைப் பணிகள்	0	
அமைச்சுப்பணிகள்	2	
மொத்தம்	2	

பின் இணைப்பு-10

(தொடர்பு பகுதி-4)

தற்காலிக நியமனங்களும் மாநிலப் பணி/சார்நிலைப்பணி/அமைச்சுப் பணிகளில் 24 மாதங்களுக்கு மேல் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்ட விவரங்கள்.

வரிசை எண் மற்றும் பதவியின் பெயர் (1)	துறையின் பெயர் (2)	நபர்களின் எண்ணிக்கை (3)	குறிப்பு (4)
மாநிலப் பணிகள்:			
1 உதவி மருத்துவ அலுவலர் (சித்தா)	மருத்துவத் துறை	16	தெரிவு நிலுவையிலுள்ளது.
2. உதவி மருத்துவ அலுவலர் (யுனானி)	மருத்துவத் துறை	1	தெரிவு நிலுவையிலுள்ளது.
3. கால்நடை உதவி மருத்துவர்.	கால்நடை பராமரிப்புத் துறை	2	பணியிடம் காலியின்மை காரணமாக.
		19	
சார்நிலை பணிகள்:			
1. இளநிலை பொறியாளர்	பொதுப் பணித்துறை	47	தற்காலிக நியமனம்
2. உதவியாளர்	தமிழ்நாடு சட்டப் பேரவை தலைமைச் செயலகப்பணி	2	தற்காலிக நியமனம்
3. திட்ட உதவியாளர்	தமிழ்நாடு மாநில தலைமைச் செயலகப் பணி	6	தற்காலிக நியமனம்
4. உதவிப் பொறியாளர்	வேளாண்மை பொறியியல் பணி	6	தற்காலிக நியமனம்
		61	
அமைச்சுப்பணி:			
1. தட்டச்சர்	கருவூலம் மற்றும் கணக்குத்துறை	2	தற்காலிக நியமனம்
2. இளநிலை உதவியாளர்	கருவூலம் மற்றும் கணககுத்துறை	12	தற்காலிக நியமனம்
3. இளநிலை உதவியாளர்	விழிப்பு மற்றும் ஊழல் தடுப்புத் துறை.	2	தற்காலிக நியமனம்
4. இளநிலை உதவியாளர்	சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை	1	தற்காலிக நியமனம்
5. தட்டச்சர்	சமூக நலத் துறை	2	தற்காலிக நியமனம்
6. சுருக்கெழுத்துத் தட்டச்சர்.	சமூக நலத் துறை	1	தற்காலிக நியமனம்
7. தட்டச்சர்	வருவாய்த் துறை	1	தற்காலிக நியமனம்

வரிசை எண் மற்றும் பதவியின் பெயர் (1)	துறையின் பெயர் (2)	நபர்களின் எண்ணிக்கை (3)	குறிப்பு (4)
8. சுருக்கெழுத்துத் தட்டச்சர்.	தொழில் துறை	3	தற்காலிக நியமனம்
9. இளநிலை உதவியாளர்	வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை	6	தற்காலிக நியமனம்
10. தட்டச்சர்	வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை	2	தற்காலிக நியமனம்
11. தட்டச்சர்	அரசுத் தேர்வுகள்	4	தற்காலிக நியமனம்
12 தட்டச்சர்	வேளாண்மைத் துறை	4	தற்காலிக நியமனம்
13. சுருக்கெழுத்துத் தட்டச்சர்.	வேளாண்மைத் துறை	2	தற்காலிக நியமனம்
14. தட்டச்சர்	கால்நடை பராமரிப்புத் துறை	2	தற்காலிக நியமனம்
15. தட்டச்சர்	வனத் துறை	2	தற்காலிக நியமனம்
16. சுருக்கெழுத்துத் தட்டச்சர்	வனத் துறை	1	தற்காலிக நியமனம்
17 சுருக்கெழுத்துத் தட்டச்சர்	தீயணைப்புத் துறை	1	தற்காலிக நியமனம்
18. சுருக்கெழுத்துத் தட்டச்சர்.	சட்டத்துறை	6	தற்காலிக நியமனம்
		54	

பின் இணைப்பு - 11

(தொடர்பு பகுதி 7)

தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து அரசு மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான விவரங்கள்:-

வரிசை எண. (1)	ஆண்டு. (2)	தேர்வாணையத்தின் கருத்தில இருந்து மாறுபட்ட வழககுகள். (3)	தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப் படாத வழக்குகள். (4)
1	1991-1992	11	2
2	1992-1993	-	1
3	1993-1994	7	-
4	1994-1995	3	-
5	1995-1996	7	..

வ. எண். (1)	பதவி மற்றும் துறையின் பெயர். (2)	விண்ணப்பம் பெற கடைசி நாள். (3)	தேர்வு முடிவுகள் தெரிவிக்கப்பட்ட நாள். (4)	காலியிடங்களின் எண்ணிக்கை. ஆதி. (5)	பழ. (6)	மி.பிவ. (7)	பிவ. (8)	ப.போ. (9)	கூடுதல். (10)	பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. ஆதி. (11)	பழ. (12)	மி.பிவ. (13)	பிவ. (14)	ப.போ. (15)	கூடுதல். (16)
23	உதவி அறுவை மருத்துவர், தமிழ்நாடு மருத்துவப்பணி.	21-7-1995	14-11-1995	116 (35)	18 (1)	171 (33)	187 (56)	213 (62)	705 (187)	-	-	-	-	-	5263
	சார்நிலைப்பணி.														
24	உதவிப பகுப்பாசிரியர், ஆவணக்காப்பகம், தமிழ்நாடு அமைச்சப் பணி.	6-6-1994	18-7-1995	-	-	-	1	-	1	43	-	-	-	-	43
25	சோதனையளர், தமிழ்நாடு தொழிற் சார்நிலைப்பணி.	21-6-1994	12-6-1995	-	-	-	1	-	1	12	-	10	103	4	129
26	உதவிகாப்பாட்சியர், (தாவரவியல் பிரிவு) அரசு அருங்காட்சியகம், தமிழ்நாடு பொதுசார்நிலை பணி.	19-9-1994	13-6-1995	-	-	-	1	-	1	-	-	-	-	-	219
27	புள்ளியியல் உதவியாளர், தமிழ்நாடு பொதுசுகாதாரம மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் பணி.	21-6-1994	13-6-1995	-	-	-	-	-	1	-	-	-	-	-	134
28	உதவிகாப்பாட்சியர், (தேசிய கலைக்கூடம்), தமிழநாடு பொதுசார நிலைப்பணி	19-9-1994	20-6-1995	-	-	-	-	-	1	-	-	-	-	-	233
29	ஆங்கிலப்பயிற்றுநர் சேவை இல்லங்கள, சமூக நலத்துறை, தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி.	14-11-1994	3-7-1995	-	-	-	-	1	1	5	-	7	35	11	58
30	இளநிலை வேதியியல், புவியியல் மற்றும் சுரஙகத் துறை, தமிழ்நாடு தொழிற் சார்நிலைப்பணி.	19-9-1994	11-7-1995	-	-	-	-	-	3 (1)	-	-	-	-	-	231
31	காட்சிக்கூட விளக்குநர், (பொதுப்பிரிவு) அரசு அருங்காட்சிகம், தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி.	17-10-1994	11-7-1995	-	-	-	-	1	1	45	-	26	71	7	149
32	தொகுப்பாளர் தமிழ்நாடு சுருள் படப்பிரிவு, தமிழநாடு பொதுச்சார்நிலைபபணி.	16-8-1994	14-7-1995	-	-	-	-	-	1	-	-	-	-	-	21
33	உதவி காப்பாட்சியர், (மானிடவியல் பிரிவு) அரசு அருங்காட்சியகம், தமிழநாடு பொதுசார்நிலைபபணி.	19-9-1994	21-7-1995	-	-	-	-	-	1	-	-	-	-	-	261
34	முதுநிலை தொழில் நுட்ப உதவியாளர் கைத்தறி மற்றும நெசவுத்துறை	17-10-1994	30-8-1995			-	-	1	1	8	1	10	[illegible]	[illegible]	83
35	பயிற்றுநா பீஙகான் மறறும மடபாணட தொழில் நுட்ப நிலையம், விருதாசலம, தமிழநாடு தொழிற்சாாநிலைபபணி.	17-10-1994	4-10-1995	-	-	-	-	-	1	6		7	15	3	31
36	இளநிலை தொழில்நுட்ப உதவியாளா கைத்தறி மற்றும் நெசவுத்துறை.	18-7-1994	6-12-1995	1 (1)	-	1 (1)	2 (1)	1 (1)	5 (4)	-		-	-	-	369
37	தமிழாசிரியர் சமூகநலத்துறை தமிழ்நாடு பொது சார்நிலைப பணி.	4-1-1995	20-12-1995	-	-	-	-	1	1	-	-	-	-	-	76
38	ஆய்வுககூட உதவியாளர் (வேதியியல்) தமிழ்நாடு மீனவளததுறை, மீன்வளச சார்நிலைபபணி	7-6-1995	29-1-1996	-	-	-	1	-	1	1	-	9	81	1	92
39	சமூகப்பணியாளர் மேலபபாக்கம் அரசு காபபு இல்லம தமிழ்நாடு பொது சார்நிலைபபணி.	3-5-1995	29-1-1996	-	-	-	-	-	1	-	-	-	-	-	35
40	இளநிலை பயிற்சி அலுவலர் (மொழி ஆங்கிலம்) வேலை வாய்ப்பு மற்றும பயிற்சித் துறை.	17-5-1995	29-1-1996	-	-	1	1 (1)	1	3 (1)	-	-	-	-	-	95
41	ஆய்வுக்கூட உதவியாளர் (விலஙகியல்) தமிழ்நாடு மீன்வள சார்நிலைப்பணி	17-10-1994	12-7-1995	1	-	-	-	-	1	111	-	-	-	-	111
42	செயல் அலுவலா நிலை-1 மற்றும நிலை-3 தமிழ்நாடு இநது சமய அறநிலையைச் சாாநிலைப பணி	27-1-1993	28-2-1996	1	-	2	1	2	6	-	-	-	-	-	6295
43	காட்சிகூட விளக்குநர் (இயற்கை அறிவியல் பிரிவு) அரசு அருஙகாட்சியகம் தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி.	4-1-1995	6-3-1996	-	-	-	-	-	1	-	-	-	-	-	183
44	அறிவியல் உதவியாளர் நிலை-2 தடய அறிவியல் சார்நிலைபபணி.	23-10-1989	22-2-1995	2	-	2 (1)	4 (1)	5 (1)	13 (3)	-	-	-	-	-	1292
45	வானொலி மேற்பார்வையாளர் தமிழ்நாடு பொறியியல் சார்நிலைபபள்ளி.	5-9-1994	13-1-1996	3 (1)	-	6 (1)	6 (2)	7 (2)	22 (6)	-	-	-	-	-	345

வ. எண். (1)	முதல் நிலைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள். ஆதி. (17)	பழ. (18)	மி.பிவ. (19)	பிவ. (20)	ப.போ. (21)	கூடுதல். (22)	இறுதித் தேர்வில் கலநது கொண்டவர்கள் ஆதி. (23)	பழ. (24)	மி.பிவ. (25)	பிவ. (26)	ப.போ. (27)	கூடுதல் (28)
23	-	-	-	-	-	- -	-	-	-	-	-	5182
24	-	-	-	-	-	-	8	-	-	-	-	8
25	-	-	-	-	-	-	-	-	-	-	-	21
26	-	-	-	-	-	-	- -	-	-	-	-	63
27	-	-	-	-	-	-	- -	-	-	-	-	16
28	-	-	-	-	-	-	- -	-	-	-	-	111
29	-	-	-	-	-	-	- -	-	2	11	4	17
30	-	-	-	-	-	-	-	-	-	-	-	89
31	-	-	-	-	-	-	20	-	10	29	2	61
32	-	-	-	-	-	-	-	-	-	-	-	4
33	-	-	-	-	-	-	23	-	12	46	5	86
34	-					-	2	-	1	16	2	21
35	-	-	-	-	-	-	1	-	2	3	1	7
36	-	-	-	-	-	- -	-	-	-	-	-	149
37	-	-	-	-	-	- -	-	-	-	-	-	35
38	-	-	-	-	-	- -	-	-	24	-	24
39	-	-	-	-	-	- -	-	-	-	-	-	11
40	-	-	-	-	-	- -	-	-	-	-	-	42
41	-	-	-	-	-	-	32	-	-	-	-	32
42	-	-	-	-	-	4713	-	-	-	-	-	30
43	-	-	-	-	-	- -	-	-	-	-	-	55
44	-	-	-	-	-	- -	-	-	-	-	-	-
45	-	-	-	-	-	- -	-	-	-	-	-	103

வ. எண். (1)	வாய்மொழித் தேர்வில் கலநது கொணடவர்கள் ஆதி. (29)	பழ. (30)	மி.பிவ. (31)	பிவ. (32)	ப.போ. (33)	கூடுதல் (34)	தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் ஆதி. (35)	பழ. (36)	மி.பிவ. (37)	பிவ. (38)	ப.போ. (39)	கூடுதல் (40)
23	-	-	-	-	-	938	89 (21)	16 (1)	124 (23)	218 (72)	115 (39)	562 (156)
24	3	-	-	-	-	3	1	-	-	-	-	1
25	-	-	-	3	-	3	-	-	-	1	-	1
26	-	-	-	3	-	3	-	-	-	1	-	1
27	-	-	-	-	3	3	-	-	-	-	1	1
28	-	-	-	-	-	3	-	-	-	-	1	1
29	-	-	-	3	-	3	-	-	-	1	-	1
30	-	-	-	-	-	8	-	-	-	-	-	3 (1)
31	-	-	-	3	-	3	-	-	-	1	-	1
32	1	-	-	1	1	3	1	-	-	-	1	1
33	-	-	-	2	-	2	-	-	-	1	-	1
34	-			3		3			-	1		1
35	-	-	1	-	-	1	-	-	1	-	-	1
36	-	-	-	-	-	14	1	-	1 (1)	3 (1)	-	5 (2)
37	-	-	-	3	-	3 (3)	-	-	-	1	-	1 (1)
38	-	-	-	3	-	3	-	-	-	1	-	1
39	-	-	-	-	-	3	-	-	-	-	-	1
40	-	-	3	3 (3)	3	9 (3)	-	-	1 (1)	1 (1)	1 (1)	3 (3)
41	3		-	-	-	3	1	-	-	-	-	1
42	-	-	-	-	-	16	1	-	3	2	-	6
43	-	-	-	-	-	3	-	-	-	1	-	1
44	3	-	4 (2)	6 (1)	1 (1)	14 (4)	2	-	4 (1)	6 (1)	1 (1)	13 (4)
45	-	-	-	-	-	33	3	-	5	6	7	21

வ. எண். (1)	தெரிவு பெற்றவர்களின் கல்வித்தகுதி. (41)	குறிப்பு. (42)
23	எம்பிபிஎஸ-299, அனெஸதிஷியா-43, சைக்கியாட்ரி-10, ரேடியாலஜி-5, அனாடமி-2, பிசியாலாஜி மைக்ரோபயாலஜி-6, பயோகெமிஸ்டரி-5, பாாமகாலஜி-4, பேததாலஜி-8, போரனசிகமருத்துவம்-2, டிபளமோ குழநதைமருத்துவம்/ பி.ஜி.பட்டம்-37, கைனகாலஜி மற்றும அபசடட்ரீஸ்/பிஜி பட்டம்-41, எமஎஸ்(பொது அறுவை)-24, கண்மருத்துவ டிபளமோ/ பி.ஜி பட்டம்-13, எம்டி (பொது மருத்துவம்)-22, டெர்மடாலஜி டிபளமோ/பிஜிபட்டம்-6, ஓடோரிஹினோ-லோலின காலாஜி/பிஜிபட்டம-1, ஆர்தோ-9, ரேடியோடை கனலிஸ்-7, வெனிராலஜி-12.	37 பிவ. பகிரஙகப போட்டியில தெரிவுப பெற்றனர், 85 காலியிடஙகள் அடுத்த தெரிவிற்கு எடுததுச் செல்லபபட்டது. (துறை வலலுநர்கள் கிடைக்காமையால் காலியிடம நிரப்பப்பட வில்லை).
24	எமஏ.(பொருளாதாரம்)-1,	
25	பி.ஏ.(மினகருவிகள்)-1.	
26	எம்எஸ்.சி.(தாவரவியல்) பிஎட -1.	
27	பி.எஸ்.சி (கணிதம்)-1	
28	எம்ஏ.(சரித்திரம) பிஎட் (முதுநிலைபபட்டயம்) சுற்றுலா-1.	
29	பிகாம் தட்டச்சு (ஆஙகிலம) உயர்நிலை சுருக்கெழுத்து (ஆங்கிலம) உயர்நிலை-1.	
30	எம்எஸ்.சி.(வேதியல்)-2, எம்எஸ்சி (பகுப்பாய்வு சாரநத வேதியில்)-1.	
31	எம்ஏ., (வரலாறு), பிஎட்-1.	
32	திரைபபடம் தொகுததமைத்தல் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு பட்டயம-1.	
33	எம்எஸ்.சி.(விலஙகியல்) எம்பில-1	
34	[illegible]	1 பிவ பகிரஙகப போட்டியில தெரிவு பெற்றார்
35	பியுசி மட்கல தொழில் நுடப பட்டயம-1.	
36	கைததறி தொழில்நுடப பட்டயம-2, நெசவுததுறை தொழில் நுடப பட்டயம்-2, கைத்தறி தொழில்நுட்ப பட்டயம மற்றும் நெசவுததுறை வேதியியல் முதுநிலை பட்டயம்-1.	
37	பிஏ (தமிழ்) பிஎட்-1	1 பிவ பகிரங்கப போட்டியில தேர்வு பெற்றார்
38	பிஎஸ்.சி (வேதியியல்)-1	
39	எம்ஏ. (சமூகவியல்) பிஎட இதழியல் பட்டயம்-1	
40	எமஏ (ஆஙகிலம்) பிஎட-1 பிஎஸசி (வேதியியல்) பிஎட எமஏ. (ஆஙகிலம)-1, பிஏ (ஆஙகிலம்)-1	
41	முதுநிலை பட்டம (விலஙகியல்)-1	
42	பிஎஸ்.சி. (வேதியியல்) பிஎல்/ டிபளமோ (தொழிலாளர் நிர்வாகம்)-1, பிஎஸ்.சி. (வேதியியல்) பிஎட -1, பிஎஸ்சி-1, பிகாம-1, எம்ஏ (சரிததிரம)-1, எமகாம் பிஎட்-1.	1-மிபிவ, 1-பிவ பகிரஙகப் போட்டியில் தேர்வு பெற்றா
43	எம்எஸ்.சி.(விலஙகியல்)-1	
44	பிஎஸ்சி (வேதியியல்)-5 தடய அறிவியல-3, பிஎஸ்சி (வேதியியல்) எம்ஏ (பொது நிர்வாகம்)-1, பிஎஸ்சி. (வேதியியல்) எமஏ (குற்றவியல்) -1, எமஎஸ்சி (வேதியியல்) -1, பிஎஸ்சி (வேதியியல்) எம்எஸசி (செய்முறை சார்ந்த (வேதியியல்)-2.	2-மிபிவ, 2-பிவ. பகிரங்க போட்டியில் தேர்வு பெறறனா.
45	பிஈ (மினதொடாபு)-4, எஸ்எஸ்எல்சி டிஇசி இ-4, பியுசி, என்டிசி (மெக்கானிக்கல்) வானொலி மற்றும் தொலைககாட்சி-1, எஸ்எஸ்எல்சி (தொழில நுட்ப பள்ளிச்சான்றிதழ்) வானொலி சரிபாாப்பு-1, எஸஎஸ்எல்சி டிபளமோ இன எலக்டரானிக்ஸ்-2, எஎம்ஐ-இ (மின்தொடர்பு-1), எசஎஸ்சி, ஐடிஐ (மெக்கானிக்) வானொலி தொலைககாட்சி-1, சிபிஎஸ்சி மின்தொடர்பு பொறியியல பட்டயம-1, எச்,எஸ்சி., எனடிசி, மெக்கானிக (வானொலி தொலைககாட்சி)-3, பியுசி (மினதொடாபு பொறியியல பட்டயம-1, எஸ் எஸ.எல்.சி மினனணுவியல் பட்டயம்-1, எஸ் எஸ.எல.சி. என்டிசி, எலக்ட்ரானிக் மெகானிக-1	1 மிபிவ காலியிடம அடுத்த தெரிவிற்கு எடுத்துச் செல்லபபட்டது.

115/11-4a

கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் காலியிடங்களின் விவரம்





கடந்த ஐந்து ஆண்டுகளில் எழுத்துத் தேர்வுகளின் எண்ணிக்கை விவரம்



கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட வாய் மொழித் தேர்வுகளின் எண்ணிக்கை விவரம்



கடந்த ஐந்து ஆண்டுகளில் தெரிவு பெற்று பணி நியமனத்திற்காக பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்



கடந்த ஐந்து ஆண்டுகளில் தீர்வு செய்யப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் எண்ணிக்கை விவரம்



கடந்த ஐந்து ஆண்டுகளில் பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலமாக பணி நியமனம் பெற பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்



சுருக்கம்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்— ஆண்டறிக்கை 1995-96ன் பதிவு செய்யப்பட்டது.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை (எம்.)

அரசு ஆணை (நிலை) எண். 394: நாள்; 1—11—1966. 1996

படிக்கப்பட்டது.;

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 24—5—1996 மற்றும் 11—7—1996 நாளிட்ட கடித எண்.1144-ஆர் மற்றும் டி-96.

ஆணை ;

பதிவு செய்யப்பட்டது.

க. அ. நம்பியார்.
அரசு தலைமைச் செயலாளர்:

பெறுநர் ;

செயலாளர்: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்: சென்னை-600 002.
அனைத்துச் செயலகத் துறைகள் (சட்டத்துறை நீங்கலாக): சென்னை-600 009.
ஆளுநரின் தனிச் செயலாளர்: ராஜ்பவன்: சென்னை-600 022.
புள்ளியியல் இயக்குநர்: சென்னை-600 006.
நூலகர்: நாடாளுமன்ற நூலகம்: இந்திய அரசு: புதுடில்லி (2 படிகள்) (2 வது நகல் நூலக அவைக்கு: வாஷிங்டன்.)
நூலகர்: தமிழ்நாடு சட்டமன்றம்: சென்னை-600 009 (3 படிகள்)
நூலகர் மத்திய தலைமைச் செயலக நூலகம்: புதுடில்லி:
இந்திய அரசு உள்துறை விவகாரங்கள் அமைச்சகம்: புதுடில்லி (மேல் கடிதத்துடன்)
இந்திய அரசு துணைச் செயலர்: பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சரவை: தலைமைச் செயலகம்: புதுடில்லி.
இந்தி அரசுத் துணைச் செயலர்: திட்டக் குழு: புதுடில்லி.
அரசு தலைமைச் செயலர்: ஒரிஸ்ஸா அரசு: புவனேசுவரம்.
பொறுப்பிலுள்ள அலுவலர்: தகவல் மையம்: அரசுத் தோட்டம்: அண்ணா சாலை சென்னை-600 002.
இந்திய ஆட்சிப் பணி அலுவலர் கல்லூரி: சிம்லா.
தேசிய நூலகம்: கல்கத்தா.
கன்னிமாரா பொது நூலகம்: சென்னை-600 008.
மத்திய நூலகம்: டவுன்ஹால்: மும்பை.
பிற்படுத்தப்பட்டோர் நல மண்டல இயக்குநர்: தென்மண்டலம்: சாஸ்திரிபவன் சென்னை-600 006 (3 படிகள்)

இயக்குநர்: ஆவணக்காப்பகம்: இந்திய தேசிய ஆவணக்காப்பகம்: ஜன்பத்: புதுடில்லி: (3 படிகள்)
மத்திய அரசு உள்துறை விவகாரங்களின் அமைச்சகம்: மனித சக்தி இயக்ககம்: புதுடில்லி (2 படிகள்)

நூலகர் மற்றும் மேற்கோள் அலுவலர்: இந்திய பொதுநிர்வாகம் நிறுவனம்: இந்திரபிரஸ்தா தோட்டம்: ரிங் சாலை: புதுடில்லி.
இயக்குநர்: தேசிய கலைக்குழுவின் நிருவாகம்: சார் லிவில்லி: முசௌரி.
உள்துறை விவகாரங்களின் அமைச்சகத்தின்: நூலகம்: தெற்கு கட்டத் தொகுதி: புதுடில்லி (2 படிகள்)
மாநில கணக்காய்வு தலைவர்: சென்னை,-600 018.
பொறுப்பிலுள்ள அலுவலர்: தகவல் மையம்: மதுரை.
இயக்குநர்: ஐக்கிய நாடுகளின் நூலகத்தின் கூட்டமைப்பு அலுவலகம்: என் 1 புதுடில்லி: தெற்கு விரிவாக்கம்: தொகுதி-1: புதுடில்லி-49 (6 படிகள்)
நூலகர் தலைமைச் செயலக நூலகம்: சென்னை-600 009.

ஆணையர்: ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி: தமிழ்நாடு ஆவணக்காப்பகம்: எழும்பூர்: சென்னை-600 008.
முதலமைச்சரின் செயலாளர்: சென்னை-9.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 1995-96க்கான ஆண்டறிக்கையின் 7-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவுரைகளில் இருந்து வேறுபாட்டிற்கான காரணங்களை விளக்கிடும் குறிப்பு..

இனம்-1 ;

மக்கள் நல்வாழ்வு (மற்றும்) குடும்ப நலத்துறை

(அரசு ஆணை (நிலை) எண். 1999: மக்கள் நல்வாழ்வு (மற்றும்) குடும்பநலத்துறை: நாள் 20—11—1990)

அரசு ஆணை (நிலை) எண்.2000: மக்கள் நல்வாழ்வு: (மற்றும்) குடும்ப நலத்துறை நாள் 20—11—1990)

அரசின் தக்க விசாரணை அதிகாரிக்குழு 1976ம் ஆண்டு வலங்கைமான் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற குடும்பநல அறுவை சிகிச்சை தொடர்பான முறைகேடுகளை விசாரித்து: செய்த பரிந்துரையின்பேரில் அம்முறைகேடுகளில் தொடர்புள்ள எட்டு குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்களும், ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். மேற்படி எட்டு பேரில் டாக்டர் ஆர். போஜன் மற்றும் டாக்டர் பி. வசந்தா ஆகிய இருவரும் இத்துறையைச் சார்ந்தவர்கள் மற்ற ஆறு அலுவலர்களும் ஊரக வளர்ச்சித்துறையைச் சார்ந்தவர்கள். ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம் விசாரணை நடத்தி அனைத்து எட்டு குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள் மீதும் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் நிரூபணம் ஆகியுள்ளதாக முடிவு கட்டி தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பியது. ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயத்தின் முடிவினை அரசு ஏற்றுக் கொண்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து கோரப் பட்டது. ஒவ்வொரு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் வெவ்வேறு தண்டனைகள் குறிப்பிட்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் பெரும்பான்மை கருத்தை தெரிவித்தது. அவற்றில் டாக்டர் ஆர். போஜன் அவர்களுக்கு மூன்றாண்டு ஊதிய உயர்வினை திரண்டபயன் இன்றி நிறுத்திவைக்கலாம் என்றும் டாக்டர் பி. வசந்தாவுக்கு ஓராண்டு ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அனைத்துகுற்றம் சாட்டப் பட்டவரையும் பணிநீக்கம் செய்வதே பொருத்தமாகும் எனத் தமிழ்நாடு அரசு பணி யாளர் தேர்வாணையத்தலைவர் தனது மாறுபாட்டு குறிப்பில் கூறியிருந்தார்.

2. இது குறித்து அரசு தன்னிச்சையாக பரிசீலித்து தேர்வாணையத் தலைவரின் கருத்திற்கு மாறாக டாக்டர் ஆர். போஜன மற்றும் டாக்டர் பி. வசந்தா ஆகியோரின் ஊதிய உயர்வின மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனோடு நிறுத்தி வைத்து 20—11—1990 நாளிட்ட அரசாணை நிலை எண். 1999 மற்றும் 2000 ஆகியவைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள் வருமாறு ;-

அனைத்து எட்டு குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகள் மீதும் நிரூபணமானதாக முடிவு செய்யப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஒரே தன்மையானது. அதாவது குடும்பநல அறுவை சிகிச்சையில் முறைகேடுகள். ஒவ்வொரு குற்றம் சாட்டப்பட்டவரும் செய்த குற்றத்தின் அளவைப்பொறுத்தவரை அவர்களிடையே மிக சொற்பமான வித்தியாசம் உள்ளது. 1975-76-ம் ஆண்டு வாக்கில் குற்றம் நடந்தது. 15 ஆண்டுகள் கழித்து ஒவ்வொரு குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தின் அளவினை தனித்தனியாக கணக்கிட்டு வெவ்வேறு தண்டனை வழங்குவது என்பது நியாயத்திற்கு புறம்பாக அமையக்கூடும். ஏன் என்றால் குற்றம் சாட்டப்பட்டவர் கள் ஏற்கெனவே பல்வேறுப்பட்ட மன உளைச்சலுக்கு உள்ளாகி இருப்பார்கள். இவ்வளவு கால இடைவெளிக்குப்பின் வெவ்வேறு தண்டனைகளை குற்றம்சாட் டப்பட்ட வெவ்வேறு நபர்களுக்கு வழங்குவது நியாயம் ஆகாது: நீதியும் ஆகாது என்று கருதப்பட்டது. எனவே அரசு தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு டாக்டர் ஆர். போஜன் மற்றும் டாக்டர் பி. வசந்தா ஆகியோர்களின் ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனோடு நிறுத்தி வைத்து அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன.

ஊரக வளர்ச்சித் துறை.

(அரசு ஆணை (3டி) எண்.58 ஊரக வளர்ச்சித்துத்துறை: நாள் 16—5—1991

(அரசு ஆணை (3டி) எண் 59: ஊரக வளர்ச்சித்துறை (நாள் 16—5—1991)

(அரசு ஆணை (3டி) எண்.60, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16-5-1991)

(அரசு ஆணை (3டி) எண்61, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16-5-1991)

(அரசு ஆணை (3டி) எண்.62, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16-5-1991)

1976-ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் அரசு மருத்துவ மனையில், மருத்துவ அதிகாரிகளும் ஊர்நல அலுவலர்களும் இணைந்து குடும்ப நல அறுவை சிகிச்சை நடத்தாமலேயே நடைபெற்றது போன்று பொய்யான ஆவணங்களைத் தயாரித்து பணத்தைக் கையாடல் செய்தது தொடர்பான முறை கேடுகளை அரசின் தக்க விசாரணை அதிகாரக்குழு விசாரித்து அளித்த பரிந்துரையின் பேரில், முறைகேடுகளில் தொடர்புள்ள எட்டு குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்களும் சென்னை ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். எட்டு குற்றம் சாட்டப்பட்டவர்களில் டாக்டர் ஆர். போஜன் மற்றும் டாக்டர் பி. வசந்தா ஆகிய இருவரும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையைச் சார்ந்தவர்கள். மற்ற ஆறு ஊர்நல அலுவலர்களும் ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்தவர்கள். ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயம் விசாரணையை நடத்தி குற்றம் சாட்டப்பட்ட எட்டு அலுவலர்கள் மீதும் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி இறுதி அறிக்கையை அனுப்பியது. ஊரக வளர்ச்சித் துறையும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையும் தீர்ப்பாயத்தின் முடிவுகளை ஏற்றுக் கொண்டது. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து கோரப்பட்டது. ஒவ்வொரு குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கும் தேர்வாணையம் பல்வேறு தண்டனைகளைப் பரிந்துரைத்தது. திரு. ஆர். கோவிந்தராஜன், ஊர்நல அலுவலருக்கு மூன்றாண்டுகளுக்கு ஊதிய உயர்வினை திரண்ட பயனுடன் நிறுத்தி வைக்கலாம் என்றும் மேலும், திருவாளர்கள் ஜி. பாபு, எஸ். ஆர். கலியபெருமாள், கே. சதாசிவம் மற்றும் எஸ். சீனிவாசன் ஆகிய ஊர்நல அலுவலர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வினை திரண்ட பயனுடன் நிறுத்தி வைக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அனைத்து குற்றம் சாட்டப்பட்டவரையும் பணி நீக்கம் செய்வதே பொருத்தமாகும் என தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் தனது மாறுபட்ட குறிப்பில் கூறியிருந்தார்.

2. இது குறித்து ஊரக வளர்ச்சித் துறையும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையும் பரிசீலித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசனைக்கு மாறாக செயல்படத் தீர்மானித்து. அதன்படி, திருவாளர்கள் ஆர். கோவிந்தராஜன், ஜி. பாபு, எஸ். ஆர். கலியப்பெருமாள், கே. சதாசிவம், மற்றும் எஸ். சீனிவாசன் ஆகிய ஊர்நல அலுவலர்களின் ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனோடு நிறுத்தி வைத்து 16—5—1991 நாளிட்ட அரசாணை (3டி) எண். 58, 59, 60, 61 மற்றும் 62 ஆகியவைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள் பின்வருமாறு :

அனைத்து எட்டு குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகளின் மீதும் நிரூபணமானதாக முடிவு செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஒரே தன்மையானது. அதாவது, குடும்பநல அறுவை சிகிச்சையில் முறைகேடுகள், ஒவ்வொரு குற்றம் சாட்டப்பட்டவரும் செய்த குற்றத்தின் அளவைப் பொறுத்தவரை அவர்களிடையே மிக சொற்பமான வித்தியாசமே உள்ளது. 1976-ஆம் ஆண்டு குற்றம் நடந்தது. 15 ஆண்டுகள் கழித்து ஒவ்வொரு குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தின் அளவினைத் தனித்தனியாக கணக்கிட்டு வெவ்வேறு தண்டனை வழங்குவது என்பது நியாயத்திற்குப் புறம்பாக அமையக்கூடும். ஏன் என்றால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஏற்கெனவே, பல்வேறுபட்ட மன உளைச்சலுக்கு உள்ளாகி இருப்பார்கள். இவ்வளவு கால இடைவெளிக்குப் பின் வெவ்வேறு தண்டனைகளை ஒரே குற்றம் சாட்டப்பட்ட வெவ்வேறு நபர்களுக்கு வழங்குவது நியாயமும் ஆகாது, நீதியும் ஆகாது என்று கருதப்பட்டது. எனவே, அரசு தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு திருவாளர்கள் ஆர். கோவிந்தராஜன், ஜி. பாபு, எஸ். ஆர். கலியப்பெருமாள், கே. சதாசிவம், மற்றும் எஸ். சீனிவாசன் ஆகிய ஊர்நல அலுவலர்களின் ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனோடு நிறுத்தி வைத்து அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன.

இனம் : 2.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை.

அ. ஆ. (டி) எண். 290, ம.நல்.வா.(ம) கு. நலத் துறை. நாள்; 2--3--1995.

1982 ஜூன் திங்கள் முதல் 1987 செப்டம்பர் திங்கள் வரை அனுமதியில்லாது பணிக்கு வராமல் இருந்ததற்காகவும், மேற்கூறிய அதே காலத்தில் தனியார் மருத்துவ மனை ஒன்றில் பணியாற்றியதற்காகவும், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் குழந்தைகள் அறுவை சிகிச்சை பயிற்றுநராக முன்பு

பணியாற்றிய மருத்துவர் எஸ். சௌந்தரராஜன் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் உள்ள விதி 17 (பி)ன் கீழ் துறை வழி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனோடு நிறுத்தி வைத்து அரசு ஆணை எண் (டி) 290, சுகாதாரம், நாள் 2—3—1995-ல் ஆணையிடப்பட்டது. ஆனால், இவ்வாணை வெளியிடப்படுவதற்கு முன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினை கலந்து ஆலோசித்ததில், நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு மருத்துவர் எஸ். சௌந்தரராஜனை பணியிலிருந்து நீக்கம் செய்வதே பொருத்தமாகும் என தனது கருத்தினை கூறியிருந்தது. ஆனால், தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக, அரசு மேற்கூறிய தண்டனையைப் (அதாவது ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனோடு நிறுத்தி வைத்தல்) மருத்துவர் சௌந்தரராஜனுக்கு வழங்கியது.

தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள் வருமாறு ;

குற்றம் சாட்டப்பட்டவர், உண்மையில் 1—6—1982 முதல் செப்டம்பர் திங்கள் 1987 வரை ஐந்து ஆண்டுகளுக்குமேல் முன்அனுமதி பெறாமல் பணிக்கு வராமல் இருந்தார் என்பது உண்மை. குற்றம் சாட்டப்பட்டவர், 1988-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பணிக்கு சேர்ந்த பின், ஆறு ஆண்டுகளுக்கு பிறகு அவர் மீது துறை வழி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறு காலந்தாழ்த்தி இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது, இந்நேர்வின் பலவீனமாகும். துறை வழி நடவடிக்கை துரிதமாக எடுக்கப்பட்டு இருக்குமானால், அவர் தனது வேலையை இழந்து விடுவோம் என்று அஞ்சி மிக முன்னரே பணியில் சேர்ந்திருப்பார். தவிர, 10—3—1988 அன்று பணியில் சேர அனுமதித்து, கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் பணியாற்றி, தொடர்ந்து பணியில் இருக்கும் இவரை பணி நீக்கம் செய்வது நியாயமாகாது. இவர் ஓய்வு பெறுவதற்கு (ஓய்வு தேதி 30—4—2007) இன்னும் நீண்ட காலம் உள்ளதால், அவரை இச்சிறு வயதிலேயே பணியிலிருந்து வெளியேற்றுவது ஏற்றுக் கொள்ளக்கூடிய கூற்றாகாது. மேலும் குழந்தை நல சிகிச்சையில் முதுகலைப் பட்டம் பெற்ற உயர் தகுதியும், பணி அனுபவமும், அனுமதியின்றி பணிக்கு வராத காலத்திற்கு பின்பு பணியில் தொடர்ந்து பணியாற்றும் இவரது செயல், இந்நேர்வில் தனித்தன்மையாக அமைந்துள்ளன. இவர் குழந்தைகளுக்கு அரிய அறுவை சிகிச்சைகள் பலவற்றைத் திறம்பட செய்துள்ளதால், இவரை பணியிலிருந்து நீக்குவதன் மூலம், திறமையுள்ள நிபுணர் ஒருவரை இழக்க அரசு விரும்பவில்லை. மேற்கண்ட உண்மைகளைக் கருத்திற்கொண்டு, இதன் தனித்தன்மையை வைத்து, தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறுபட்டு, மருத்துவர் எஸ். சௌந்தரராஜனின் ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனோடு நிறுத்தி வைத்து அரசு ஆணையிட்டது. தேர்வாணையத்திற்கு இது பற்றிய அரசு கடிதம் எண். 64082/ஐ/90-21, சுகாதாரம், நாள்: 10—3—1995 வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனம் 3

வணிக வரி மற்றும் அறநிலையத் துறை.

[அ.ஆ.(D)எண். 159, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 7—4—1995.]

பேராவூரணி சார் பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட வில்லங்கச் சான்று தயாரிப்பது தொடர்பாக, அதற்குப் பொறுப்பான இளநிலை உதவியாளர், திரு. இரா. சண்முகப் பெருமாள் என்பவர் மீது பட்டுக்கோட்டை மாவட்டப் பதிவாளர் தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு முறை மற்றும் மேல் முறையீடு) விதி 17 (எ)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடர்ந்து சம்பந்தப்பட்ட திரு. இரா. சண்முகப் பெருமாள் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டார். மேற் கண்ட எச்சரிக்கை போதுமானது இல்லை என்று தனிச்சையாக முடிவெடுத்து, பதிவுத் துறைத் தலைவர் அன்னார் மீது. தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு முறை மற்றும் மேல் முறையீடு) விதி 17(எ)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடர்ந்து, குற்றம் சாட்டப்பட்ட அலுவலரது விளக்கம் பெற்று பரிசீலித்து அவரது ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஓராண்டுக்கு நிறுத்தி வைக்க ஆணையிட்டார்.

2. திரு. இரா. சண்முகப் பெருமாள் அரசுக்கு அளித்துள்ள மனு பதிவுத் துறைத் தலைவரால் தண்டிக்கப்பட்ட ஓராண்டு கால ஊதிய உயர்வு தண்டனைக்கு எதிரானதாகும். எனவே, இதனை மனுதாரரின் மேல் முறையீடாகக் கருதி, அதன் அடிப்படையில் அம்மேல்முறையீட்டினை தமிழ்நாடு தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை 18(1)(எ)-ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து கோரப்பட்டது. தேர்வாணையம் மாவட்டப் பதிவாளரால் எச்சரிக்கை செய்து ஆணையிடப்பட்ட கோப்பு அதன் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு அடிப்படையாக அமைவதால் மேல் முறையீடு மீது முடிவெடுக்க கோப்பு இன்றியமையாததாகி விடுகிறது. எனவே அடிப்படைக் கோப்பு அழிக்கப்பட்ட நிலையில் தேர்வாணையம் இந்நேர்வின் மீது தனது கருத்துக்களை வழங்க இயலாது என்று அரசுக்குத் தெரித்தது.

3. மேற்கண்ட சூழ்நிலையில், அடிப்படைக் கோப்பு அழிக்கப்பட்ட நிலையிலும், தேர்வாணையம் குறிப்புரை ஏதும் வழங்காத நிலையிலும், மேல் முறையீட்டை தகுதி அடிப்படையில் (on Merit) பரிசீலிக்கலாம் என பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, வணிக வரி மற்றும் அறநிலையத் துறைக்கு ஆலோசனை வழங்கியது. அதன் படியே, மேல் முறையீட்டை, தகுதி அடிப்படையில் இத் துறையில் பரிசீலித்து பதிவுத் துறைத் தலைவரால் வழங்கப்பட்ட ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனையை மாற்றி 'கண்டனம்' தண்டனை வழங்கலாம் என முடிவு செய்து, சுற்றோட்டத்தில் முன்னாள் வருவாய்த் துறை அமைச்சரின் ஆணை பெற்று பின் அரசாணை எண். 159, நாள் 7—4—1995-ல், மேல் முறையீட்டாளருக்கு ஓராண்டுக்கு ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை மாற்றி 'கண்டனம்' தண்டனை வழங்கப்பட்டது.

இனம் 4.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

[அரசு ஆணை (டி) எண். 1127, நாள் 16—8—1995.]

மருத்துவ அதிகாரி திருமதி சரோஜினி தேவி ராஜகோபால் உதவி மருத்துவ அதிகாரியாக குன்னூர் தொழிலாளர் ஈட்டுறுதிக் காப்பக மருத்துவமனையில் பணிபுரிந்த பொழுது 16—4—1986 முதல் பணிக்கு வரவில்லை. விடுப்பு வேண்டி அவர் கோரியிருந்ததால் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணி இயக்குநரால் அது மறுக்கப்பட்டதுடன் பணியில் சேரும்படியும் அறிவுறுத்தப்பட்டார். மருத்துவ அதிகாரி இயக்குநரின் அறிவுரையை ஏற்காமல் விடுப்பு அனுமதி இல்லாமலிருந்தும் பணிக்கு வராமல் இருந்து விட்டார். இயக்குநர் மீண்டும் அவரை பணிக்கு திரும்ப ஆணையிட்டார், தவறினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தினார். ஆனால் மேற் கூறப்பட்ட மருத்துவ அதிகாரி பணிக்கு திரும்பவில்லை. அனுமதி இல்லாமல் பணிக்கு வராமலிருந்ததற்கும் இயக்குநரின் கட்டளைக்கு பணியாமைக்கும் இம்மருத்துவர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு முறை மற்றும் மேல் முறையீடு) விதி 17(பி)-ன் கீழ் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணி இயக்குநரால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

தன்னுடைய ஒரே மகன் உடல் நலம் இல்லாததால்தான் விடுமுறையில் சென்று விட்டதாக தன்னுடைய தற்காப்பு அறிக்கையில் மேற் கூறப்பட்ட மருத்துவ அதிகாரி கூறியுள்ளார். இக்கருத்துரு, சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் ஆய்வு செய்யப்பட்ட பின்பு அரசு ஒரு தற்காலிக முடிவுக்கு வந்தது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இது குறித்து கலந்தாலோசிக்கப்பட்ட பொழுது மருத்துவர் திருமதி சரோஜினி தேவி ராஜகோபாலை பணியிலிருந்து நீக்க தேர்வாணையம் அறிவுரை வழங்கியது.

தேர்வாணையத்தின் கருத்திலிருந்து அரசு விலக நேர்ந்ததற்கான காரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

அரசு ஆணை நிலை எண் 251, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் 5—9—1994 ஆணையின்படி ஒரு அரசுப் பணியாளரின் பணி விலகல் கடிதமானது கீழ்க்கண்ட விதிமுறைகள் நிறைவு செய்யப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

அரசு பணியிலிருந்து அவர் விலக நேரும் பட்சத்தில் அதன் விளைவுகள் குறித்து தான் அறிந்துள்ளதாக அறிவிப்பு பணி விலகல் கடிதத்துடன் அனுப்பப்படவேண்டும். சம்பந்தப்பட்ட அலுவலர் மீது விடுப்பு இல்லாமல் பணிக்கு வராதது குறித்த ஒழுங்கு நடவடிக்கை தவிர்த்து வேறு ஒழுங்கு நடவடிக்கை எதுவும் இல்லாத பட்சத்திலும் அரசுக்கு பணம் எதுவும் திரும்ப செலுத்த தேவையில்லாத பட்சத்திலும் மற்றும் அரசுப் பணியில் இருக்க வேண்டும் என்ற பிணைப்பு இல்லாத பட்சத்திலும் பணிவிலகல் கடிதம் ஏற்கப்படலாம் மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் இந்நேர்வில் நிறைவு செய்யப்பட்டன. மேலும் மருத்துவ அதிகாரி சரோஜினி தேவி ராஜகோபால் 16-4-1986 அன்றிலிருந்து மிகவும் கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்த தன் மகனைப் பார்க்க விடுப்பில் சென்றார். தன்னுடைய பதவி விலகல் கடிதத்தை கொடுத்துள்ளதால் அவருக்கு பணியில் சேர்ந்து அரசு பணியை தொடரும் எண்ணம் எதுவும் இல்லை. ஆகவே குன்னூர் அரசு பொதுமருத்துவமனை மருத்துவ அதிகாரி சரோஜினி தேவி ராஜகோபால் அனுமதி பெறாமல் விடுப்பில் சென்ற நாளிலிருந்து அவர் பணி விலகல் கடிதத்தை அரசு ஏற்று கொண்டு அவர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை கைவிட்டது.

இனம் 5

உள்துறை

(அ.ஆ. நிலை எண். 1323, உள்துறை, நாள் : 6-9-1995)

துணை காவல் கண்காணிப்பாளர் வகை(2) பதவிக்கு மாற்றல் அடிப்படையில் நியமனம் பெற தகுதி உள்ள ஆயுத சேமப்படை ஆய்வாளர்களின் 1984-85 ஆண்டிற்கான முறையான தேர்ந்த பெயர்ப்பட்டியல் அரசு ஆணை நிலை எண். 1323, உள்துறை, நாள் 6-9-1995-ல் ஏற்பளிக்கப்பட்டது. இந்த பெயர்ப்பட்டியலில் கீழ்க்காணும் 9 நபர்கள் இடம் பெற்றுள்ளனர்.

பெயர் (1)	முன்னுரிமை வரிசை (2)
திரு. எஸ். கோவிந்தராஜன்	1
திரு. எஸ். தங்கப்ப நாடார்	2
திரு. பி. ஜோசப் சிரில்	3
திரு. என். ராஜேந்திரன்	4
திரு. ஆர். ஸ்ரீதரன்	5
திரு. ஆர். வி. வீரண்ணன்	6
திரு. ஏ. சோனைமுத்து	7
திரு. பி. கோயில்பிச்சை	8
திரு. எஸ்.டி. லச்சுமிநரசிம்மன்	9

எனினும் மேற்படி 1984-85ம் ஆண்டிற்கான வகை (2) துணைகாவல் கண்காணிப்பாளர்களின் முறையான தேர்ந்த பெயர்ப்பட்டியலில் இடம்பெற கீழ்க் காணும் தகுதியான 6 நபர்களின் பெயர்களை மாத்திரமே தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பரிந்துரை செய்தது (அவ்வாண்டில் மதிப்பீடு செய்யப் பட்ட காலியிடங்கள் 10).

பெயர் (1)	முன்னுரிமை வரிசை (2)
திரு. எஸ். தங்கப்ப நாடார்	1
திரு. பி. ஜோசப் சிரில்	2
திரு. என். ராஜேந்திரன்	3
திரு. ஆர். வி. வீரண்ணன்	4
திரு. ஏ. சோனைமுத்து	5
திரு. எஸ்.டி. லச்சுமிநரசிம்மன்	[illegible]

மேலும் கீழ்க்காணும் நபர்களை வகை (2) துணை காவல் கண்காணிப்பாளர்களாக நியமனம் செய்வதற்கு 'இன்னமும் தகுதியற்றவர்கள்' எனவும் தேர்வாணையம் பரிந்துரைத்தது.

திரு. சி.எல். தாசன்

திரு. எஸ். கோவிந்தராஜன்

திரு. ஆர். ஸ்ரீதரன்

திரு. பி. கோயில்பிச்சை

2. வகை (2) துணைகாவல் கண்காணிப்பாளர்களில் பதவி உயர்வு பெற 1984-85 ஆண்டிற்கான தற்காலிகப்பதவி உயர்வுப் பட்டியல் அரசு ஆணை எண் 1517 உள்துறை, நாள் 25-6-1985ல் வெளியிடப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள நான்கு நபர்களையும் சேர்த்து 10 நபர்கள் இரண்டாவது பட்டியலாக அது வெளியிடப் பட்டது. தற்காலிகப் பட்டியலில் மேற்குறிப்பிட்ட நான்கு நபர்களின் பெயர்களை சேர்க்க காவல்துறை இயக்குநர் பரிந்துரை செய்யாதபோதிலும் மேற்குறிப்பிட்ட நான்கு பேர்களையும், அவரவர் தகுதிகளை நன்கு ஆய்வு செய்ததோடு அவர்களின் மந்தனக் கோப்புகளில் செய்யப்பட்ட கணிப்பு 'நன்று' என இருந்தாலும் மேற்படி நான்கு நபர்களை அரசு 1984-85 ஆண்டுக்கான வகை (2) துணை காவல் கண்காணிப்பாளர்களுக்கான தற்காலிகப் பட்டியலில் சேர்த்து ஆணை வெளியிட்டது. இவர்களை தற்காலிக பட்டியலில் சேர்க்கப்பட்டதன் அடிப்படையில் அவர்களை முறையான பட்டியலிலும் சேர்க்க தங்களது பரிந்துரையை மறுபரிசீலனை செய்து திருத்திய பரிந்துரையை (revised recommendations) அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தை கேட்டுக் கொண்டதில் தங்களது முந்தைய பரிந்துரையில் மாற்றம் ஏதும் செய்வதற்கில்லை என தேர்வாணையம் தெரிவித்தது. மேற்படி நான்கு நபர்களும் 1984-85 ஆண்டிற்கான தற்காலிக தேர்ந்த பெயர்ப் பட்டியலில் இடம் பெற்றதின் அடிப்படையில் ஜூலை'85 முதல் துணை காவல் கண்காணிப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டு 9 ஆண்டுகளுக்கு மேல் வகை (2) துணை காவல் கண்காணிப்பாளர்களாக பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் பெயர்களை 1984-85 ஆண்டின் முறையான பட்டியலில் சேர்க்காவிட்டால் பல நிர்வாக இடையூறுகள் ஏற்படுவதோடு பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தை அணுக நேரிடும். இச்சிக்கல்களை கருத்திற்கொண்டு இந்நான்கு பேர்களின் பெயர்களையும் 1984-85 ஆண்டிற்கான முறையான பட்டியலில் சேர்க்கலாம் என அரசு முடிவு செய்தது. எனினும் முறையான தேர்வு பெயர்ப்பட்டியல் வெளியிடுவதற்குமுன் மேற்படி நான்கு பேர்களில் ஒருவர் வேலூர் சிறப்பு முகாமிலிருந்து சில அகதிகள் தப்பி ஓடிய நிகழ்வு தொடர்பாக தற்காலிகப்பணி நீக்கம் செய்யப்பட்டதால் அன்னாரின் பெயரை முறையான பட்டியலில் சேர்ப்பதில் இருந்து தள்ளி வைக்கலாம் (defer) என முடிவு செய்து, மற்ற 9 பெயர்களைக் கொண்ட முறையான பட்டியல் வெளியிடப்பட்டது.

<u>இனம் 6</u>

<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை</u>

[அரசு ஆணை (டி) எண். 1322, சுகாதாரம் நாள் 28-9-1995]

1. சேலம் மாவட்டம் திருச்செங்கோடு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை முன்னாள் உதவி மருத்துவர் எ. வேலப்பன் 25—11—1989 முதல் ஆறு மாதங்களுக்கு விடுப்பு விண்ணப்பித்து மீண்டும் நீட்டித்தார். சேலம் மண்டல நிர்வாக அலுவலரும் (தொழிலாளர் ஈட்டுறுதி), மருத்துவப்பணி மற்றும் ஊரக நலப்பணி இயக்குநரும் விடுப்பினை நிராகரித்ததுடன் நான்கு தடவைகளில் முறையே 31—12—1989, 31—3—1990, 10—9—1990, 15—2—1991, ஆகிய தேதிகளில் பணியில் சேரும்படி கட்டளையிட்டனர். கட்டளைகளை பெற்றுக்கொண்டபோதிலும் திரு. வேலப்பன் பணியில் சேரவில்லை.

2. மருத்துவர் வேலப்பன் அனுமதியின்றி பணிக்கு வராததாலும், மேலதிகாரிகளின் கட்டளைக்கு கீழ்ப்படியாத காரணத்தாலும், அவர் மீது தமிழ் நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு முறை மற்றும் மேல் முறையீடு) விதி 17(ஆ)ன் கீழ் குற்றச் சாட்டு குறிப்பாணையை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் பிறப்பித்தார்.

3. குற்றம் சாட்டப்பட்ட மருத்துவர் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு பதில் ஏதும் அளிக்கவில்லை. நேர்முக விசாரணையும் கோரவில்லை. இருப்பினும் நேர்முக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. நேர்முக விசாரணையின்போது மருத்துவர் வேலப்பன் தான் ஏற்கனவே விடுப்பு விண்ணப்பித்திருந்த காரணத்தால் குற்றச் சாட்டு குறிப்பாணைக்கு பதில் கொடுக்கத் தேவையில்லை என்று கருதியதாகவும் பதில் தெரிவித்தார். விசாரணை அலுவலரிடம் தன்னுடைய ராஜினாமா கடிதத்தை ஏற்றுக் கொண்டு தன்னை அரசுப் பணியிலிருந்து விடுவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையில் மருத்துவர் வேலப்பன் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். விசாரணை அறிக்கையை ஏற்றுக் கொண்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அரசு ஆணை வேண்டி கருத்துரு அனுப்பினார். கோப்பினை பரிசீலித்த அரசு தற்காலிக முடிவு ஒன்றை மேற்கொண்ட பின் 1954-ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறை விதி 18(1)(ஆ)ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்தை நாடியது. தேர்வாணையம் குற்றம் சாட்டப்பட்ட மருத்துவர் வேலப்பனை பணி நீக்கம் செய்ய ஆலோசனை வழங்கியது

4. தேர்வாணையத்தின் நோக்கிலிருந்து விலகியதற்கான காரணங்கள் ;

6—8—1934 தேதியிட்ட அரசாணை எண் 818 பொதுத் துறையின்படி: ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ள நபரின் பணி விலகல் கோரிக்கை ஏற்கப்படலாகாது. மேற்கண்ட ஆணையை மறுபரிசீலனை செய்து அனுமதியின்றி பணிக்கு வராத நிகழ்வில் பணி விலகல் கோரிக்கையை ஏற்கலாம் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டு அவ்வாறே அரசாணை எண். 251/ ப. (ம) நி. சீ. து ற நாள் 5—9—1994ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்நிகழ்வில் மேற்கண்ட ஆணை பிறப்பிக்கப்படும் முன்பே அதாவது 5—9—1994-க்கு முன்பே தவறு நிகழ்ந்துள்ளதால் அரசாணை 818: பொது நாள் 6—8—1934-ஐ தளர்த்த வேண்டியதாயிற்று. ப. (ம) நி. சீ. துறையின் ஆலோசனையின்படி அரசாணை 818 பொது நாள் 6—8—1934ஐ தளர்த்தி மருத்துவர் வேலப்பன பணி விலகலை 25—11—1989 தேதி முதல் (அனுமதியின்றி பணிக்கு வராத நாள் முதல்) ஏற்க முடிவு செய்து அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையை கைவிடக் கருதப்பட்டது.

இனம்-7 ; மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை ;

(அ. ஆ. (டி) எண் 46: நாள் 8—1—1996.)

மருத்துவர் பி. ஜெயராஜ் மதுரை மாநகராட்சியில் மார்ச் 1987 முதல் பிப்ரவரி 1991 வரை சுகாதார அலுவலராகப் பணி புரிந்தார். அறைகலன்கள் மற்றும் மருந்து வாங்குவதில் அவர் செய்த முறைகேட்டினால் மதுரை மாநகராட்சிக்கு ரூ. 97,102/- இழப்பு ஏற்பட்டது. ஆகவே, அவர் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு முறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் உள்ள விதி 17(பி)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதியில் மாதம் ஒன்றுக்கு ரூ. 200/- வீதம் ஐந்து ஆண்டு காலத்திற்கு அவருடைய ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்து அரசாணை (டி) எண். 46 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை நாள் 8—1—1996ல் ஆணையிட முடிவு செய்யப்பட்டது. இவ்வாணை வெளியிடும் முன்று தமிழ்நாடு தேர்வாணையத்தைக் கலந்தாலோசித்தபோது, குற்றம் சுமத்தப்பட்டவர் மீது குற்றம் கண்டுபிடிக்க ஆதாரங்கள் ஏதுமில்லை எனக் கூறி அவர் மீது உள்ள குற்ற சாட்டுக்களை கைவிட்டு முழுவதுமாக அவரை குற்றமற்றவராக்க வேண்டும் என்று தனது கருத்தைத் தெரிவித்தது என்பதே இந்நேர்வில் உள்ள முக்கிய அம்சமாகும். ஆனால் தேர்வாணையத்தின் கருத்தில் இருந்து மாறுபட்டு மேற்கூறிய ஆணையை அரசு வெளியிட்டது.

தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக அரசு முடிவெடுத்ததற்கான காரணங்கள் வருமாறு ;—

மதுரையில் தன் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று மகப்பேறு நிலையங்களுக்கு அறைகலன்கள் மற்றும் மருந்து வாங்கியதில் அவர் செய்த முறைகேட்டிற்காக, மருத்துவர் ஜெயராஜ் மீது ஏழு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. புலனாய்வு அதிகாரியான விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநர், மருத்துவர் பி. ஜெயராஜ் மீதான குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தியுள்ளார். துறைவழி ஒழுங்கு நடவடிக்கையில் விசாரணை அதிகாரியும் மருத்துவர் ஜெயராஜ் மீதுள்ள 1 முதல் 5 மற்றும் 7-வது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாகவும் மற்றும் 6-வது குற்றச்சாட்டுக்கு அவர் மட்டும் முழுப்பொறுப்பாக மாட்டார் எனவும் தெரிவித்துள்ளார். மருத்துவர் பி. ஜெயராஜ் செய்த முறைகேட்டினால் மதுரை மாநகராட்சிக்கு ரூ. 97,102/- இழப்பு ஏற்பட்டுள்ளது. புலனாய்வு அதிகாரியும் துறைவழி விசாரணை அதிகாரியும் மருத்துவர் ஜெயராஜ் குற்றம் புரிந்தவர் என்று கூறியுள்ள நிலையில், அரசு இதனை ஆய்வு செய்து அவருக்கு தண்டனை வழங்குவதே சரியான தீர்ப்பாகும் எனக் கருதியது. ஆகையினால் தமிழ்நாடு தேர்வாணையத்தின் அறிவுரையிலிருந்து மாறுபட்டு மருத்துவர் ஜெயராஜுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்ய அரசாணை (டி) 46 சுகாதாரம், நாள் 8—1—1996ல் ஆணை வெளியிட்டது.

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.